**cross**

**O.S. No. 306/2021**

**Date:20.08.2025**

**வா,சா. 3 முருகையா**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் வாதிக்கு தான் என் மகளை திருமணம் செய்து வைத்துள்ளேன். வாதி தரப்பில் 2ம் சாட்சி அளித்தவர் எனது மனைவி. எனக்கு 1978 அல்லது 1979 ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. எனக்கும் வாதிக்கும் ஒரே ஊர். கிருஷ்ணசாமித்தேவரை சிறு வயது முதலே தெரியும். கிருஷ்ணசாமித்தேவரின் அப்பா இறக்கும் போது கிருஷ்ணசாமித்தேவருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணசாமித்தேவர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணசாமித்தேவர் ஆவணத்தில் கையொப்பம் செய்வார். கிருஷ்ணசாமித்தேவருக்கு வாசிக்க தெரியுமா என்பது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் திருமணம் நடக்கும் போது கிருஷ்ணசாமித்தேவரின் தம்பிக்கும் அவருக்கும் எந்த பிரச்சினையும் கிடையாது. எனக்கு திருமணம் நடக்கும் போது கருப்பசாமி சிறு வயது என்பதால் எனது மனைவிக்கு கிருஷ்ணசாமித்தேவர் தான் அனைத்து சீர்களையும் செய்தார். நான் 10 ம்வகுப்பு படித்து விட்டு ரேசன் கடையில் விற்பனையாளராக வேலை செய்தேன். இராமசாமியாபுரத்தில் உள்ள 5 கிராமங்களிலும் வேலை செய்தேன். வழக்குரை சொத்தில் 3 கிரையம் பெற்ற போதிலும் நான் ஒரு கிரைய ஆவணத்தில் மட்டும் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கிருஷ்ணசாமித்தேவருக்கு பூர்விக இடங்கள் இருந்தது ஆனால் சர்வே எண் தெரியாது. மேற்படி பூர்விக இடங்களில் கிருஷ்ணசாமித்தேவர் நெல், சோளம் பயிர் செய்து வந்தார். மேற்படி பூர்விக

இடங்களில் இருந்து வருமானத்தை கொண்டு தான் அனைத்து சொத்துக்களையும் வாங்கி திருமணம் செய்து வைத்தார் என்றால் சொத்துக்கள் எதுவும் வாங்கவில்லை கிருஷ்ணசாமித்தேவர் அவரது உழைப்பில் இருந்து நகை வாங்கி திருமணம் செய்து வைத்தார். கிருஷ்ணசாமித்தேவர் பூர்விக நிலத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி பூர்விக சொத்திலிருந்து வருமானத்தை கொண்டு தான் கூட்டுக் குடும்பத்திற்கு கிருஷ்ணசாமித்தேவர் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியுமா வழக்கு சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என பரிகாரம் கோரியுள்ளார். வழக்கு சொத்து நாளது தேதியில் கிருஷ்ணசாமித்தேவர் வசம் உள்ளது அவர் இறந்து விட்டார் தற்போது அவரது வாரிசுகளான வாதிகள் வசம் உள்ளது. 1979 ஆம் ஆண்டு கிருஷ்ணசாமித்தேவர் காசிப்பாண்டி தேவரிடம் இருந்து கிரய சொத்தை தனிப்பட்ட சொத்தாக பெற்றார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீரபாண்டி தேவர் காலமான பின்பு கிருஷ்ணசாமித்தேவருக்கும் அவரது தம்பி கருப்பசாமி பாண்டியனுக்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை. தற்போது சாட்சி சொத்துக்கள் கருப்பசாமி பாண்டியனுக்கு பிரிந்து விட்டதாக சாட்சியம் அளிக்கிறார். வாதி குடும்பத்திற்கு எனது மகளை கொடுத்துள்ளதால் வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.